ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1813 - 2013 මැයි මස 31 වැනි වැනි සිකුරාදා - 2013.05.31

*1813 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1528 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) மதுவரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) அற்றோணித் தத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) நொத்தாரிசு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கொழும்பு மாநகர சபை

*மிருகங்கள் அறுத்தல் தொடர்பான கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)*

*இணைக்கப்பட்டுள்ள உப பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கு முன்பாக காணப்படும் விபரங்களின் படி அந்தந்த விலாசங்களில் 2013 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகள் நடாத்துவதற்கு இறைச்சிக்கடை அனுமதிப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு கொழும்பு நகரில் வசிக்கும் எந்த நபரிடம் இருந்தாவது எதிர்ப்பு தோன்றுமாயின் அவை எழுத்து மூலம் இரண்டு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு அறிவித்தலில் காணப்படும் திகதியிலிருந்தும் 14 நாட்களுக்குள் என்னை வந்து சேரும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இறைச்சி அறுத்தல் கட்டளைச் சட்டம் (272 ஆம் சரத்து) 07 (02) வது பிரிவின்படி இவ்வறிவிப்பு விடுக்கப்படுகின்றது.*

*அஹமட் ஜமல்டீன் மொஹொமட் முசம்மில்,*
*மாநகர முதல்வர்,*
*கொழும்பு மாநகர சபை.*

*மாநகர மண்டபம்,*
*கொழும்பு 07.*
*2013.05.15.*

**அட்டவணை**

| தொடர் இல. | விண்ணப்பதாரியின் பெயர் | கடை இலக்கம் | வியாபாரம் |
|---|---|---|---|
| ***வெள்ளவத்தை சந்தை :*** | | | |
| 1. | திரு. எம். ஐ. என். கான் | 02 | ஆட்டிறைச்சி |
| ***டீன்ஸ் பாதை சந்தை :*** | | | |
| 2. | திரு. எம். ரகுமான் | 44/14 | மாட்டிறைச்சி |
| ***கொம்பனித்தெரு சந்தை :*** | | | |
| 3. | திருமதி எம். எச். பீ. நிசார் | 02 | மாட்டிறைச்சி |

*5-907*

---

## ரம்புக்கனைப் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2012.12.26 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட முன்மொழிதலுக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு*

ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்ப அதிகாரம் இருப்பதாகவும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப்படும்.

ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,
தவிசாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2012, திசெம்பர் 26.

| | | | |
|---|---|---|---|
| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
| | | 375.0 அடி<br>(114.0 மீற்றர்) | 9.0 அடி<br>(2.75 மீற்றர்) |

கிராம அலுவலர் பிரிவு - இலக்கம் 05 தெலிவல

வீதியின் பெயர் - மிரிஹாகொட பன்வத்தஹேன வீதியிலிருந்து எம். ஜீ. புஞ்சிபண்டா அவர்களின் காணி வரையிலான துணை வீதி

மிரிஹாகொட பன்வத்தஹேன வீதியிலிருந்து ஆரம்பித்து இடது பக்கமாக எஸ். ஏ. ரஞ்ஜித் ஜயதிஸ்ஸ என்பவருக்குச் சொந்தமான கோன்கஹமுலவத்த காணி, பி. எஸ். ஜீ. சுமனரத்தின என்பவருக்குச் சொந்தமான தொட்டில்லகஹமுலவத்த எனும் பரகஹமுலவத்த காணி, எம். ஜீ. கிரிபண்டா என்பவருக்குச் சொந்தமான கோன்கஹமுலவத்த எனும் காணிகளில் எல்லையாவதும்,

வலப்பக்கமாக எஸ். ஏ. ரஞ்ஜித் ஜயதிஸ்ஸ, எஸ். ஏ. பொடிநிலமே என்பவர்களுக்குச் சொந்தமான கோன்கஹமுலவத்த காணியிலிருந்து எல்லையாகும் மிரிஹாகொட பன்வத்தஹேன வீதியிலிருந்து எம். ஜீ. புஞ்சிபண்டாவின் காணி வரையிலான துணை வீதி.

5-925/1

---

**ரம்புக்கனைப் பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2012.12.26 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட முன்மொழிதலுக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீல அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்ப

அதிகாரம் இருப்பதாகவும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீல அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப்படும்.

ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,
தவிசாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2012, திசெம்பர் 26.

| | | | |
|---|---|---|---|
| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
| | | 995.0 அடி<br>(303.0 மீற்றர்) | 10.0 அடி<br>(3.00 மீற்றர்) |

கிராம அலுவலர் பிரிவு - இலக்கம் 02 B மெதகலதெனிய
வீதியின் பெயர் - மெதகலதெனிய பதலவத்த வீதி

மெதகலதெனியவில் ஆரம்பித்து இடப்பக்கமாக டப்ளியூ. விமலசிறி என்பவருக்குச் சொந்தமான இஹலகொடுவ காணி, டபிள்யூ. ஜயசேன என்பவருக்குச் சொந்தமான உடகொடுவ காணி, எஸ். வீரசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான வரபனயாகேவத்த, ஈ. டபிள்யூ. எஸ். எதிரிசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான மெதவத்த எனும் காணிகளுக்கு எல்லையாவதும்,

வலப்பக்கமாக ஈ. குணபால என்பவருக்குச் சொந்தமான கல்பொத்தஹேன காணி, டபிள்யூ. எஸ். டி. குமார, ஏ. எஸ். கே. திஸாநாயக என்பவர்களுக்குச் சொந்தமான உடகனத்தேஹேன, ஜே. ரணசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான இஹல கொடுவ காணி. எஸ். எம். ஹேமலதா, எஸ். எஸ். விஜேசூரிய, ஈ. பீ. கருணாவதீ, ஈ. ஜயதிலக என்பவர்களுக்குச் சொந்தமான கல்பொத்தஹேன காணியும், ஈ. செனவிரத்தின என்பவருக்குச் சொந்தமான உடகனத்தேஹேன காணி, ஈ. டபிள்யூ. எஸ். எதிரிசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான மூனகஹமுலவத்த வத்த எனும் காணிகளுக்கு எல்லையாகும் மெதகலதெனிய பதலவத்த வத்த வீதி.

5-925/2

---

## பொல்பிதிகம பிரதேச சபை

நிறைவேற்றப்பட்ட துணைவிதிகள்

261 ஆவது அதிகாரமான 1952 ஆம் ஆண்டின் மாகாண தாபனக் கோவையின் 3 ஆவது கூற்றின் (1) ஆவது உப கூற்றில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப பொல்பிதிகம பிரதேச சபையினால் 2013.02.27 அன்றைய தினம் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 06 (iv) தீர்மானத்தின்படி கீழ் குறிப்பிடப்படும் தீர்மானம் கூட்டத்தினால் நிறைவேற்றப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

எல். ஆர். ரஞ்சித் விஜேனாயக,
தலைவர்,
பொல்பிதிகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பொல்பிதிகம,
2013, பெப்புருவரி 27.

**அட்டவணை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை கோவையின் 2 ஆவது கூற்றின் (1) ஆவது உப கூற்றின்படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பபட்ட 16.07.2010 ஆந் திகதியையும் 1663 ஆம் இலக்கத்தையுமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் வடமேல் மாகாண சபையினால் 2011, சனவரி மாதம் 18 ஆந் திகதி நடைபெற்ற மாகாண சபை பொதுக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக 28.04.2011 ஆந் திகதிய 1703/18 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைகளில் பொருத்தமற்ற ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய மற்றும் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய பொருத்தமற்ற நடவடிக்கை தொடர்பான உப கட்டளை, சுற்றுலா வியாபாரம் சம்பந்தமான உப கட்டளை, பிரதேச சபைக்கு உட்பட்ட எல்லையில் வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான உப கட்டளை, பிரதேச சபைக்கு உட்பட்ட எல்லைக்குள் நுளம்பு மற்றும் நோய்களை உண்டாக்கும் பூச்சிகளை அழித்தல் தொடர்பான உப கூற்று, பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாதை மற்றும் தெருக்களை அலங்கரிப்பது தொடர்பான உப கூற்று, வாடகை வீடு மற்றும் விடுதிகள் சம்பந்தமான உப கூற்று போன்ற பிரேரணைகள் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றுக்கொண்டதாக மேற்குறிப்பிடப்பட்ட மாகாண சபை தாபனக் கோவையின் 3 ஆவது கூற்றின் (1) ஆவது உப கூற்றின் படி பொல்பிதிகம பிரதேச சபை பிரேரிக்கின்றது.*

5-997

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.